**தமிழக சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் 1–8–2006 அன்று சட்டப் பேரவையில் படித்தளித்த அறிக்கை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நேற்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கு போதிய நேரம் கிடைக்காத காரணத்தால் நான் இங்கே சொல்வதாக இருந்த சில கருத்துக்களை, சில செய்திகளை வேறு வழியின்றி 110வது விதியின் கீழ் இந்த மாமன்றத்தில் வைக்கிறேன்.

நடந்து முடிந்த 2006ஆம் ஆண்டு சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆதரவுடன் திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகள் இந்த மூன்று மாதக் காலத்திற்குள்ளாகவே பெரும் பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளன.

- ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்
- பள்ளிக் குழந்தைகள் சத்துணவில் வாரம் இரு முட்டைகள்
- ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயிகள் கூட்டுறவு கடன் ரத்து
- பள்ளிகளில் தமிழ் கட்டாயம்
- திருமண நிதி உதவித் திட்டம்
- மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணம் குறைப்பு
- வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை
- நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம்
- கூட்டுறவு வங்கிக் கடன்களுக்கு வட்டிக் குறைப்பு
- சுயநிதி சிறப்புத் தொகை கட்டி முன்னுரிமை பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்குத் தனித்தனி வாரியம்

- ஒப்பந்த முறை ஆசிரியர்கள், அரசு அலுவலர்களுக்கு கால முறை ஊதியம்.
- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக ஆணை
- காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிப்பு
- திரைப்படத் துறைக்குத் தாராளச் சலுகைகள்
- சமூக நீதி – இட ஒதுக்கீடு தீர்மானம்
- கண்ணகி சிலை மீண்டும் அமைப்பு
- சிவாஜி சிலை திறப்பு
- விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவி சட்டம்
- முதியோர், நலிந்த கலைஞர்கள், ஊனமுற்றோருக்கு உதவித் தொகை உயர்வு.
- எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் நீக்கம்.
- மத மாற்றத் தடைச்சட்டம் நீக்கம்.
- வணிகர்களுக்கு வரிச் சலுகைகள்,
- அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வரி நீக்கம்.
- அரசு அலுவலர்களுக்கு அளப்பரிய சாதனைகள்

தேர்தல் வாக்குறுதிகள் ஒரே கட்டமாக நிறைவேற்றப்படுவதும் – பல கட்டங்களில் நிறைவேற்றப்படுவதும்தான் நடைமுறை சாத்தியமானதாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனுபவ ரீதியாக அறிவார்கள் – அவற்றில் ஒன்றான வண்ணத் தொலைக்காட்சி யில்லாத வீடுகளுக்கு அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிட ஒரு அனைத்துக் கட்சிக் குழு வையே அமைத்து ஆலோசனைகளைப் பெற்று முதல் கட்டமாக வரும் செப்டம்பர் மாதம் 30 ஆயிரம் வீடுகளுக்கு அத்தொலைக்காட்சிப் பெட்டி களைத் தருவதென்றும் – அடுத்த கட்டமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை தொடர்ந்து வழங்குவதென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

மற்றொரு வாக்குறுதியான தரிசு நில வாக்குறுதி பற்றி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடான “தீக்கதிர்” இன்று (1–8–2006) எழுதியுள்ள தலையங்கத்தில்

“தேர்தல் வாக்குறுதியாக தொடங்கி, பட்ஜெட் அறிவிப்பாக இரண்டு ஏக்கர் தரிசு நிலத் திட்டம் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது நல்ல அம்சம் என்றும், இந்த அறிவிப்பை அமலாக்குவது அவ்வளவு சுலபமல்ல என்பது உண்மை எனினும் இத்திட்டம் நிறைவேற ஆக்கபூர்வமான யோசனைகள் கூறுவதே மாநில மக்கள் நலனில் அக்கறையுள்ளோரின் தலையாய பணியாகும் – என்றும்; அ.தி.மு.க. அரசு முன்பு சமர்ப்பித்த பட்ஜெட் உரையில் ஐம்பது இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது என்றும்; இந்தியா முழுவதும் உள்ள விவசாய நிலப் பரப்பில் 3.5 சதவீதமே மேற்கு வங்கத்தில் உள்ளது, ஆனால் இந்தியா முழுவதும் விநியோகிக்கப்பட்ட நிலத்தில் 20 சதவீதம் மேற்கு வங்கத்தில் விநியோகிக்கப்பட்டவை என்பது சாதாரணச் செய்தியல்ல – என்றும்; அதிலும் 10.63 லட்சம் ஹெக்டேர் நிலங்களை 26 லட்சத்து 46 ஆயிரம் குடும்பங்களுக்கு விநியோகித்துள்ளனர் – என்றும்; தரிசு நில விநியோகத் திட்டம் உரிய முறைப்படி செயல்படுத்தப்பட்டால் அதன் பலன் அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கவே செய்யும்” – என்றும்;

கருத்தமைந்த பகுதியைச் சுட்டிக்காட்டுவதோடு, தரிசு நிலம் பற்றிய தேர்தல் அறிக்கை வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்றுவதற்கு தொடக்கம் செய்துவிட்டது என்பதற்கான புள்ளி விபரத்தையும் இந்த அவைக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த விபரம் வருமாறு :–

தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்களை பண்படுத்தி நிலமற்ற ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அளிப்பது என்று தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும், நிதி நிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தற்போது தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்கள் எவ்வளவு என்பது குறித்து கணக்கெடுக்கும் பணி கடந்த ஒரு மாத காலமாக தமிழக அரசின் வருவாய்த் துறை மூலமாக

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடைபெற்று, முதற்கட்ட புள்ளி விவரங்கள் தற்போது அரசுக்கு வந்துள்ளன.

ஆக்கிரமிப்பு இல்லாத ஒப்படை செய்யக் கூடிய அரசு புறம்போக்கு தரிசு நிலம் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர்.

சிறு குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலம் 67 ஆயிரம் ஏக்கர். 98 ஆயிரம் ஏழை விவசாயிகள் இந்த நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

சிறு குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் ஏழு இலட்சம் ஏக்கர். இது 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானதாகும்.

1. ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான ஒரு இலட்சத்து 95 ஆயிரம் தரிசு நிலத்தினை மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப் பட்டுவிட்டன.

2. சிறு குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலமான 67 ஆயிரம் ஏக்கரை பண்படுத்தி, அதனை ஆக்ரமித்துள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கே மீண்டும் வழங்கப்பட இருக்கிறது.

3. சிறு குறு விவசாயிகளுக்குச் சொந்தமான ஏழு இலட்சம் ஏக்கர் தரிசு பட்டா நிலத்தைப் பொறுத்த வரையில் அவர்களாகவே விரும்பிக் கேட்டுக் கொண்டால் அந்த நிலத்தினை விவசாயம் செய்யத்தக்க நிலமாகப் பண்படுத்தி அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும்.

எனவே இந்த வகையில் முதற்கட்டமாக தமிழகத்திலே உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலத்தை மேம்படுத்தி இந்த அரசினால் வழங்கப்படும். அதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.